Centre Tamoul d'Enseignements en France

பிரான்ஸ் தமிழர் கல்வி நிலையம்

## தமிழ்ப் பேச்சுப் போட்டி - 2022

9 வயதுக்குட்பட்டவர்கள்

---

# தைப்பொங்கல்

தமிழர் தம் வரலாற்றில் பல்வேறு படிநிலைகளை கடந்து வந்துள்ளனர். அவர்கள் வாழ்விடத்திற்கு ஏற்பவும் தொழிலுக்கு ஏற்பவும் பல்வேறு சடங்குகளையும், விழாக்களையும் நடாத்திவருகின்றனர். வேடுவனாக வாழத்தொடங்கிய மனிதன் மருதநில நாகரீகத்தை உருவாக்கியபோது செழிப்புடன் வாழத்தொடங்கினான். விவசாயத்தால் உணவுக்கான பயம் நீங்கியது. தம் நல்வாழ்விற்கு வளம்சேர்த்த நிலம், சூரியன், மாடு போன்றவற்றை வணங்கினான். விவசாயத்திற்கு காரணமான சூரியனை நன்றியுடன் வணங்க தமிழர் ஏற்படுத்திய விழாவே தைப்பொங்கல். இதனை தைத்திருநாள் என்றும் அழைப்பார்கள்.

உழவர் விழாவாக தொடங்கிய இவ்விழா நிலம் கடந்து, தொழில் கடந்து தமிழர்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் விழாவாக உள்ளது. தைப்பொங்கல் நாளில் கிழக்கு வெளுத்துவர வீட்டுமுற்றத்தில் கோலம் போட்டு, புது அடுப்பில் புதுப்பானையில் புதிதாக விளைந்த அரிசியில் பொங்கல் பொங்குவார்கள். வீட்டில் மாவிலை, தோரணம் கட்டி புதுப்பானையில் மஞ்சல், இஞ்சியிலை கட்டப்படும். பானையை அடுப்பில்வைத்து பசும்பாலை ஊற்றி அடுப்பை எரியவைத்து பால் பொங்கிவர அரிசியை பானையில் இடுவார்கள். சூழ இருப்பவர்கள் “பொங்கலோ பொங்கல்” என சத்தமிடுவர்.

பொங்கிய பொங்கலையும் பழவகைகள், கரும்பு ஆகியனவற்றையும் சூரியனுக்கு படைத்து சுற்றத்தாருடன் கூடியிருந்து உண்பார்கள். இவ்விழா எங்கு இடம்பெயர்ந்து, புலம்பெயர்ந்து சென்றாலும் கொண்டாடும் தமிழர் விழாவாக உள்ளது. தமிழர் பண்பாட்டுக் குறியீடாக தைப்பொங்கல்விழா விளங்குகிறது.

நன்றி